Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 7 (25-11-65) இதழ் 286

விசுவாவசு கார்த்திகை 10 ஷ:பான் பிறை 1 வியாழக்கிழமை

முக்கிய அறிவித்தல்

மில்க்வைற் நீல சோப்
தற்பொழுது
புதிய ரசாயனப் பொருட்கள்
சேர்க்கப்பட்டு
பெரிய சைஸ் கட்டியாக
தயாரிக்கப்படுகின்றது.
20 சதத்திற்கு எங்கும் கிடைக்கும்.
கூடிய உடுப்புகளை சலவை செய்யலாம்.
Advt

## தரம் குறைந்த மாவு!

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணத்தில் தரம் குறைந்த மாவு விநியோகிக்கப் படுவதையும் இந்த மாவில் தயாரிக்கப்படும் பாண் உண்பதற்கு உதவாதவை யென்றும் பாண் தயாரிப்பாளர் புகார் செய்திருந்ததுடன் இந்த தரம் குறைந்த மாவு விநியோகிக்கப் படுவதையும் இந்த மாவில் பாண் தயாரிக்கப் படுவதையும் 'ஈழநாடு' சுட்டிக் காட்டியிருந்தது. இதைத் தொடர்ந்து இப்பொழுது பாண்

(6-ம் பக்கம் பார்க்க)

# பதுக்கல் பொருள்கள் வெளிவந்தன

## 'இல்லாத' பொருள்களை வாங்க ஜனத்திரள்

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாண நகர பகுதியிலுள்ள பல பலசரக்குக்கடைகளில் பொருள்கள் வாங்குவதற்காக 'கியூ' வரிசையில் பெருமளவு ஜனக் கூட்டம் நின்று கொண்டிருப்பதை நேற்றைய தினம் காணக் கூடியதாக விருந்தது.

சென்ற சில தினங்களாக யாழ்ப்பாணக் கடைகளில் பதுக்கலையும், கொள்ளை லாபமடிப்பவர்களையும் அம்பலப்படுத்தியதைத் தொடர்ந்தும், யாழ். அரசாங்க அதிபர், பொலிஸார், காரியாதிகாரிகள் ஆகியோர்கள பதுக்கலையும், கொள்ளை லாபமடிப்பவர்களையும் பிடிப்பதற்கான ''வேட்டை'' யில இறங்கியிருப்பதைத் தொடர்ந்தும் கடைகளில் இதுவரை 'இல்லை' என்று சொல்லப்பட்டு வந்த புளி, மல்லி, உருளைக்கிழங்கு போன்ற பொருள்கள் வெளியே வரத் தொடங்கியுள்ளன. தட்பாடாகவிருந்த இப் பொருட்களைப் பெற முடியாது கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த பொதுமக்கள் இதுவரைகாலமும் 'ஒழிந்து' கிடந்த பொருட்களைப் பெறுவதில் அவதிப்பட்டு கடைகளில் வந்து குவிந்த வண்ணமிருக் கின்றனராம்! இதுவரைகாலமும் 'இல்லை' யென்று சொன்ன கடைக்காரர்களும் 'இல்லை' என்று சொல்லாது இருக்கும் பொருட்களையெல்லாம் பெருந்தன்மையுடன் கொடுக்கிறார்களாம்.

### 56 ருத்தல் புளி பறிமுதல்

யாழ்ப்பாண ஆஸ்பத்திரி வீதியிலுள்ள ஒரு கடையில் நேற்று 56 ருத்தல் புளி பறிமுதல் செய்யப்பட்டது. யாழ்ப்பாணம் தலைமைக் காரியாலய காரியாதிகாரி திரு. டி. டபிள்யு. செல்வரத்தினம் தலைமையில் சென்ற தூதுகோஷ்டியொன்று மேற்படி கடையில் விற்பனை செய்யப்பட்ட புளி கலப்படம் என்பதைத் தெரிந்து பறிமுதல் செய்து கொண்டது. ''புளி வேண்டுமா? புளி வேண்டுமா?'' என்று அக்கடைக்காரர் ஜனங்களை வலிய அழைத்து விற்பனை செய்தபோதே மேற்படி சம்பவம் இடம் பெற்றது. சார்ஜன்ட் எஸ். பி. ஆமுனுஹம புளியைப் பறிமுதல் செய்தார். இக்கடையின் லைசென்ஸை ரத்துச் செய்வதா என்பதுபற்றி அரசாங்கம் முடிவு செய்தபின் நடவடிக்கை எடுக்குமெனவும் தெரிவிக்கப்பட்டது.

## ஸ்ரீமதி ஜோன்ஸன், இந்திராவுக்கு இஸபெல்லா விருதுகள்

ரோமாபுரி, நவ. 24

பலதுறைகளில் சிறப்பாகச் சேவையாற்றியதற்கான 'இஸபெல்லா' விருதை ஸ்ரீமதி இந்திராகாந்தி பெற்றுக்கொண்டார்.

இத்தாலிய அரசாங்கத்தின் சார்பாக விஞ்ஞான ஆராய்ச்சி மந்திரி செனட்டர் கார்ப் அர்னேடி, நகர மண்டபத்தில் விருதுகளை வழங்கினர்.

அழகு, கலையறிவு, அரசியல் யுக்தி போன்றவற்றில் புகழ்பெற்ற இஸபெல்லாவின் சிலைகள் ஸ்ரீமதி இந்திரா, அமெரிக்க ஜனாதிபதியின் மனைவி ஸ்ரீமதி ஜோன்ஸன், சோவியத் விண்வெளி வீராங்கனை வெலண்டீனா, புகழ்பெற்ற சோவியத் நடன மங்கை மாயாபிளஸெட் உட்பட பல பெண்களுக்கு வழங்கப்பட்டன. (பி. டி. ஸி.)

## பூட்டோ வழுக்கி விழுந்தார்: மாஸ்கோ கடும்பனி காரணம்

மாஸ்கோ, நவ. 24

பாகிஸ்தான் வெளிவிவகார மந்திரி திரு. பூட்டோவைத் தாக்கி வந்த விமானம், கடுமையாகப் பனி பெய்து கொண்டிருந்த போது மாஸ்கோ விமான நிலையத்தில் இறங்கியது.

எனவே திரு. பூட்டோ விமானத்திலிருந்து இறங்கி காருக்குச் சென்று ஏற முயன்றபோது. வழுக்கி விழுந்தார். ஆனல் காயம் ஏற்படாதவாறு அதிகாரிகள் அவரைத் தாங்கிக்கொண்டு காரில் ஏற உதவிசெய்தனர்.

சோவியத் மத்திய ஆசியாவிலுள்ள டாஷ்கண்டில் அயூபும், சாஸ்திரியும் சந்தித்துப் பேச வருமாறு விடுக்கப்பட்ட அழைப்பு குறித்து திரு. பூட்டோ, ரஷ்யத்தலைவர்களுடன் பேசவிருக்கிறார்.

பாகிஸ்தான் இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனல் திரு. சாஸ்திரி இந்திய-பாகிஸ்தான் உறவு பற்றி மட்டுமே அயூப்புடன் பேசமுடியும் என இன்றைய பார்லிமெண்டில் கூறினர்.

தனது நான்கு நாள் ரஷ்ய விஜயம் குறித்து திரு. பூட்டோ எதுவும் சொல்லமறுத்துவிட்டார். (பி. டி. ஸி.)

## வாக்காளர் இடாப்பிலிருந்து தமிழ்ப் பெயர்களை நீக்கமுயற்சி!

பம்பலப்பிட்டி, புதன்

தமிழர்களை வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கிவிடுவதற்கானமுயற்சிகள் ரிஜிஸ்தார் ஜெனரல் காரியாலயத்தினல் மேற்கொள்ளப்பட்டுவருவதாகத் தெரிகிறது.

இந்த நாட்டின் பிரஜைகள் என்பது தெளிவாக இருந்தும், பெயர்கள் தமிழ் பெயராக இருப்பதன் காரணத்தினல் சில தமிழ் பிரஜைகள் அவர்கள் இந்த நாட்டின் பிரஜைகள் என்பதை உறுதிப்படுத்துமாறு ரிஜிஸ்தார் ஜெனரல் காரியாலயத்தினல் கோரப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் 'நீர் ஒரு இலங்கைப் பிரஜை என்பதை என்னல் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. நீர் இந்த நாட்டின் பிரஜையாக இருந்தால் இதனைத் தகுந்த தஸ்தாவேஜுகளுடன் இக்கடிதம் கிடைத்த 7 நாட்களுக்குள் நிரூபிக்கவேண்டும்' எனக் கோரப்பட்டுள்ளது.

இதனை 7 நாட்களுக்குள் நிரூபிக்கத் தவறினல் பெயர், வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கப்பட்டுவிடும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கூழாவடி கொலைவழக்கு

யாழ்ப்பாணம், வியா.

கூழாவடி கொலை வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் கோட்டில், நீதிபதி திரு. ரி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டபோது, ஆனைக்கோட்டை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். இராசையா சாட்சியமளித்தார்.

இவ்வழக்கில் 1965-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2-ந் திகதி கதிரவேலு காளிமுத்து என்பவர் கூழாவடியில் திருமதி ராஜமார்த்தாண்டனைக் கொலை செய்ததாகவும், திருமதி தேவராசனை கொலைசெய்ய முயற்சித்ததாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிசார்பில் எவரும்ஆஜராகவில்லை. இறந்தவரின் நலனைக் கவனிப்பதற்காக புறக்டர் ஜிம்மி ராசரத்தினம் ஆஜரானர்.

விசாரணையின்போது நீதிபதி டிசம்பர் 7-ந் திகதிவரை வழக்கை ஒத்திவைத்தார்.

## ஐஸன்ஹோவர் உடல் நிலை

வாஷிங்டன், நவ. 24

முன்னுள் அமெரிக்க ஜனாதிபதி ஐஸன்ஹோவர் விசேஷ ரயில் மூலம் வாஷிங்டனுக்கு அழைத்து வரப்பட்டிருக்கிறார் இங்கிருந்து ஹெலிகோப்டர் மூலர் அவர் வால்டர் ரீட் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். இருதய நோயினல் பாதிக்கப்பட்டிருக்கும் அவர் எவ்வளவு காலம் ஆஸ்பத்திரியில் இருப்பார் என்பது தெரியவில்லை. பி.டி ஸி.

## மீன் பிடிக்கச் சென்றவர் கடற் கறையில் இறந்து கிடந்தார்

### புலன் விசாரணை செய்யுமாறு மரண விசாரணை அதிகாரி உத்தரவு

யாழ்ப்பாணம், வியா.

கடலில் மீன்பிடிக்கச் சென்ற ஒருவர் ஐந்து நாட்களாகியும் திரும்பாததால் மற்றும் மீன்பிடித் தொழிலாளர்கள் அவ்விடத்திருச் சென்றபோது அவர் கடற்கரையில் இறந்து கிடந்தாராம்.

ராயப்பு அருளப்பு என்ற 50 வயதானவரின் மரண விசாரணையின்போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது. காலஞ்சென்றவருக்கு 9 பிள்ளைகள் என்றும் கூறப்பட்டது.

விசாரணை நடத்திய யாழ்ப்பாணம் மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ. அமிர்தலிங்கம் சாட்சியங்கள் திருப்திகரமாக இல்லையென்று கூறி, பொலிஸாரை மேலும் விசாரணை செய்யுமாறு உத்தரவிட்டு தீர்ப்பு வழங்குவதைப் பின்போட்டார.

வைத்தி குரோஸ் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: நானும் காலஞ்சென்றவரும் 18-ம் திகதி வியாழக்கிழமை மற்றும் 40 பேர்களுடன் வள்ளத்தில் மீன் பிடிக்கச் சென்ருேம். ஒரு இடத்தில் மீன்களைப்பிடித்து காலஞ்சென்றவரை காவலாக விட்டுவிட்டு வேறு இடத்திற்குச் சென்ருேம். திரும்பிவந்தபோது அவர் எங்களுடன் வரவில்லையென்றும் தான் பின்பு வருவதாகவும் கூறினர். 5 நாட்களாக அவர் வீடு திரும்பவில்லை. இதனல் நாங்கள் மீண்டும் அந்த இடத்திற்குச் சென்ற போது அவர் கடற்கரையில் இறந்து கிடந்தார்.

சட்டவைத்திய அதிகாரி திரு. எஸ். சுப்பிரமணியம் சாட்சியமளிக்கையில், பிரேதம் அழுகிய நிலையிலிருந்த படியால் மரணம் சம்பவித்த காரணத்தைக் கூறமுடியாயாமலிருப்பதாகவும் உடலில் காயங்கள் எதுவும் காணப்படவில்லையென்றும் தெரிவித்தார்.

மரணவிசாரணையை 26ம் திகதிவரை மரணவிசாரணை அதிகாரி ஒத்திவைத்தார்.

## வான்சாரதி விடுதலை

யாழ்ப்பாணம், புதன்

கல்வி இலாகாவிற்குச் சொந்தமான பொருட்களை திருடியதாக யாழ்ப்பாணம் பொலிஸாரால் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு, யாழ்ப்பாணம்மாஜிஸ்திரேட். திரு. ரி ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டபின், நீதிபதி எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கில், வான்சாரதி பொன்னையா சிறில் என்பவர் கல்வி இலாகாவிற்குச் சொந்தமான, 2 பெற்ருேமாக்ஸ் விளக்குகளையும், ஒரு ஸ்டோவையும் திருடியதாக குற்றஞ்சாட்டப் பட்டிருந்தது.

எதிரி சார்பில் அட்வகேட் திரு. கே.வி எஸ். சண்முகநாதன் திருவாளர்கள் எஸ். சி. கதிரவேலு, எஸ். நடராசா ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர்.

## இந்திய நூலகம்

புதுடிலலி, நவ 24

லண்டனிலுள்ள இந்திய நூலகம் பற்றிய பிரச்னை சீ பிரிவு கவுன்ஸில் நீதிபதிகளைக்கொண்ட நீதிமன்றத்தின் முன்வரும் என கல்வி மந்திரி சக்ளா கூறினர்.

### மணிவாக்கு

உனது உடல் ஒரு நடமாடும் கோவில். உனது வீடு அல்லது அலுவலகம் ஒரு புனிதஸ்தலம். நடத்தல், உண்ணல், மூச்சுவிடுதல், பார்த்தல், கேட்டல் முதலிய உனது சகல செயல்களும் இறைவன் வழிபாடு என்று சதா பாவனைசெய். இந்த மனப்பான்மை எத்தகைய சாதாரணச் செயலையும் இறைவன் வழிபாடாக உடனே மாற்றிவிடுகிறது. — சுவாமி சிவானந்தர்

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna Phone: 38

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு கார்த்திகை மீ 10 உ (25-11-65)

## விவசாய விருத்தி

விவசாயத்தை விருத்தி செய்யுமுகமாகவும் விவசாயத்தில் பொது மக்களுக்கும் மாணவ மாணவியருக்கும் அக்கறையேற்படுத்தவும் களைபிடுங்குதல், நாற்று நடுதல், தூர்ந்துபோன குளங்களைத் துப்புரவு செய்தல் போன்ற சிரமதானப் பணிகளில் பாடசாலைப் பிள்ளைகளை ஈடுபடுத்தும் இயக்கம் இப்பொழுது நாட்டின் பல இடங்களிலும் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. பாடசாலைப் பிள்ளைகள் இப்பணியில் உற்சாகத்துடன் ஈடுபட்டுவருகின்றனர். இது விவசாயிகளுக்குச் செலவு குறைவதுடன் பிள்ளைகளுக்கு விவசாயத்தில் ஆர்வத்தையும் ஊட்டியுள்ளது.

நாட்டின் உணவுப்பிரச்னையைத் தீர்க்க விவசாயத்தை விருத்தி செய்ய வேண்டிய அவசியத்தை உணர்ந்து இந்த இயக்கத்தை ஆரம்பித்துள்ள இச்சமயத்தில் விவசாய விருத்திக்கு திட்டவட்டமான கொள்கை அவசியமென்பதையும், விவசாய விருத்தித் திட்டங்கள் பல தோல்வியடைந்த காரணத்தையும் விளக்கி விவசாய இலாகா டைரக்டர் வெளியிட்டுள்ள நிர்வாக அறிக்கை சமய சந்தர்ப்பமானதாகும். பாடசாலை மாணவர்களைக் கொண்டு, இன்றுள்ள நிலையைச் சமாளிப்பதற்காகவோ, வருடமொரு முறையோ களைபிடுங்கும் இயக்கத்தையும் நாற்று நடும் இயக்கத்தையும் நடத்தி விடுவதால் விவசாயம் விருத்தியடைந்துவிடாது; உணவுப் பிரச்னையும் தீர்ந்துவிடாது. பேனு பிடித்து நாற்காலியில் அமர்ந்து வேலைசெய்வதுதான் கல்வியின் நோக்கம் என்று கருதும் மாணவ மாணவியருக்கும், நாற்காலி உத்தியோகத்துக்காகவே பிள்ளைகளைத் தயாரிக்கும் இன்றைய கல்வித் திட்டத்தில் மாற்றம் ஏற்படுத்துவதற்கும் திட்டவட்டமான விவசாய விருத்திக் கொள்கையொன்று அவசியம். விவசாய விருத்திக்கு நவீன முறைகளைக் கையாள்வதற்கும், புதிய ஆராய்ச்சிகள் செய்து அவற்றை பயன்படுத்தவும் எடுக்கப்படும் நடவடிக்கைகளால் தான் பாடசாலைப் பிள்ளைகளுக்கும் மற்றும் படித்து வேலையில்லாதிருக்கும் இளைஞருக்கும் விவசாயத்தில் ஆர்வம் ஏற்படுத்த முடியும்.

விவசாய ஆராய்ச்சி, விவசாயப் பண்ணைகளின் நிர்வாக உத்தியோகத்தர் பற்ருக்குறை, விவசாய விஸ்தரிப்பு, உப உணவுப் பொருள் உற்பத்தி, காய்கறிச் செய்கை, அரசாங்க பண்ணை ஆகியவை சம்பந்தமாகக் கடந்தகாலத்தில் எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்தது பற்றியும் அதற்கான காரணங்கள் பற்றியும் விவசாய இலாகா டைரக்டர் தமது 1963—64ம் வருட நிர்வாக அறிக்கையில் விபரமாகத் தெரிவித்துள்ளார். விவசாயத்தில் நவீன முறைகளைக் கையாண்டு உற்பத்தியைப் பெருக்குவதில் பெரும் வெற்றியீட்டியுள்ள ஜப்பானை விடுத்து இலங்கையுடன் விடுதலையடைந்த இந்தியாவுடன் ஒட்பிட்டுப் பார்த்தாலும், அங்குகூட விவசாயம் பெருமளவில் விருத்தியடைந்துள்ளது. அதிக விளைச்சலைத் தரக்கூடிய புதியரகவிதைநெல் ஆராய்ச்சிகளும், பசளை, உரம் உற்பத்தி ஆராய்ச்சிகளும் அங்கு வெற்றியளித்துள்ளன.

விவசாய டைரக்டர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளகுறைகளை விவசாய அமைச்சும் அரசாங்கமும் உடனடியாகப் பரிசீலனை செய்து, அவசியமானுல் வெளிநாடுகளின் ஆலோசனைகளையும் பெற்று இங்கும் விவசாயத்தை சிறந்தமுறையில் விருத்திசெய்வதற்கு உறுதியான, தெளிவான திட்டம் வகுக்கப்படவேண்டும். இத்திட்டத்தின் அடிப்படையில் கல்வித் திட்டத்திலும் மாறுதல் செய்து சகல பாடசாலைகளிலும் விவசாய போதனையும், செய்கையும் ஒரு பாடமாகவும் ஏற்படுத்த வேண்டும். அப்பொழுது தான் விவசாயம் இங்கு விருத்தியடையவும் உணவுப்பிரச்னை நிரந்தரமாகத் தீரவும் வழிபிறக்க முடியும்.

### முருங்கைக் காய்கள் பஸஸிலிருந்து மறைந்தன!

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் ஜேப்படித் திருட்டுக்கள் அதிகரித்துக்கொண்டிருக்கிற சமயத்தில் பஸ்களுள்ளும் சிலர் தமது கைவரிசைகளைக் காட்ட முற்பட்டுவருவதாகச் செய்திகள் கிடைக்கின்றன.

நேற்று சங்கானையிலிருந்து யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த இரட்டைத் தட்டு பஸ்ஸில் பிரயாணம் செய்துகொண்டிருந்த ஒரு பெண் தாம் இறங்கும் இடம் வந்ததும் தம்முடன் கொண்டு வந்த முருங்கைக்காய் கட்டைத் தேடினுர்; காணவில்லை! இறுதியில் கண்டக்டரிடம் புகார் செய்துவிட்டு பஸ்ஸைவிட்டு இறங்கினுர்.

### ஆச்சிரமத்துக்கு அத்திவாரக் கல்

யாழ்ப்பாணம், வியா.

கைதடி கொத்தாக்குடையில் சிறுகுடிசையாகவிருந்த ஸ்ரீசச்சிதானந்தசுவாமி ஆச்சிரமத்தை பெருப்பித்துக் கட்டுவதற்கான அத்திபாரக்கல்லை யாழ்ப்பாணம் கந்தர்மடம் சிவவேதாந்த மட அதிபர் ஸ்ரீ இராமலிங்கசுவாமிகள் நாட்டினுர்.

தெல்லிப்பழையில்

# 35லட்ச ரூபா செலவில் புதிய ஆஸ்பத்திரி

குரும்பசிட்டி, புதன்

தெல்லிப்பழை - கட்டுவன் வீதியில் புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் ரூபா 35 லட்சம் செலவில் நிறுவப்படவிருக்கும் புதிய ஆஸ்பத்திரி கட்டட நிர்மாண வேலைகள் வெகு விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. வலி வடக்கு காரியாதிகாரி திரு. ரி முருகேசம்பிள்ளை இதற்காக அரசாங்கத்தால் சுவீகரிக்கப்படும் 30 ஏக்கர் காணிகளினதும் உரிமையாளர்களை கந்தோருக்கு அழைத்து பேச்சுக்கள் நடாத்தினுர். பேச்சு வார்த்தையின் போது சுவீகரிக்கப்படும் காணிகளுக்கு பெறுமதிப் பணம் வழங்கப்படும் என்றும் சுவீகரிக்கப்படுவதில் ஏதாவது ஆட்சேபம் இருக்கும் பட்சத்தில் அரசாங்க அதிபருக்கு தெரியப்படுத்த வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டது. டிசம்பர் மாத இறுதியில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவிருக்கும் சுகாதார அமைச்சர் ஆஸ்பத்திரிக்கான அத்திபாரக் கல்லினை நாட்டிவைப்பார்.

காங்கேசன்துறையில் தற்போதுள்ள ஆஸ்பத்திரி காலப்போக்கில் சிமெந்து தொழிற்சாலையுடன் சேர்க்கப்படலாம் என்றும் இதனுல் சிமெந்து கூட்டுஸ்தாபனம் கட்டடங்களுக்கான செலவில் ரூபாய் 20 லட்சம் சுகாதார இலாகாவுக்கு வழங்குமெனவும் சொல்லபபடுகிறது.

### அநுராதபுரத்தில் வீடுகட்ட காணிகள்

பம்பலப்பிட்டி, புதன்

அனுராதபுரம் புதிய நகர் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 800 புதிய கட்டடங்கள் கட்டுவதற்கான காணிகள் டிசம்பர் மாதத்திலிருந்து விநியோகிக்கப்படுமெனத் தெரியவருகிறது.

அநுராதபுரத்தில் வதியும் குடியிருப்பாளர்களிடமிருந்து மனுக்கள் நவம்பர் 30-ந் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

### தீவுப்பகுதி வட்டார 7-ம் வகுப்பு பரீட்சை

நெடுந்தீவு, புதன்

தீவுப்பகுதி வட்டார வித்தியாதரிசியால் நடாத்தப்படும் 7-ம் வகுப்புப் பரீட்சை இம்மாதம் 27-ம் திகதி சனிக்கிழமை தீவுப்பகுதி பூராவும் நடைபெறவிருக்கிறது. தமிழ், எண், சமூகபாடம் ஆகிய பாடங்களில் மட்டுமே இப் பரீட்சை நடைபெறும். இப் பரீட்சை வருடா வருடம் நடைபெறுவதென்பது குறிப்பிடத்தக்கது.

### தபால் விநியோகம் பற்றி அதிருப்தி

வவனியா, வியா.

புதுக்குடியிருப்பு தபால் நிலையத்தில்பிற்பகல் 2 மணிக்குத் தபால் விநியோகம் செய்யப்படுவதாகவும், 2 மணிக்கு முன் தபால் சேகரிக்கப்பட்டு விடுவதாகவும். இதனுல அவ்வூர் பொது மக்களும், பாடசாலைகளும் மற்றும் பொது ஸ்தாபனங்களும் அதிருப்தி கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

இவ்வித நிலையைப்போக்க வேண்டுமென்றும் தபால் விநியோகத்தை 6 மணிக்கே செய்வதற்கான வழிவகைகள் கையாளப்பட வேண்டுமென்றும் புதுக்குடியிருப்பு கிராம சபையின் கூட்டத்தில் திரு. பி. கனகரத்தினத்தால் கொண்டுவரப்பட்ட பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது. இப்பிரேரணையை திரு. அ. மரியாம்பிள்ளை ஆமோதித்தார். நிறைவேற்றப்பட்ட இத்தீர்மானத்தை தபால் அதிபருக்கும், வட பிரதேச அதிபருக்கும்அனுப்புவதென்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

கூட்டம் கிராமசபை மண்டபத்தில் தலைவர் திரு. சி. சிதம்பரப்பிள்ளையின் தலைமையில் நடைபெற்றது.

### நாட்டிலும் நகரிலும்

சென்ற வருடத்தில் நடைபெற்ற ஜி. சி. ஈ. (உயர்தர) பரீட்சை சம்பந்தமாக கல்விப்பகுதியிலிருந்து சில ருசிகரமான தகவல்கள் கிடைத்திருக்கின்றன. இலங்கை முழுவதிலும் இப்பரீட்சை எழுதிய 22,000 மாணவ மாணவிகளில் ஆக 175 பேர் தான் ஆங்கிலத்தை ஒரு பாடமாக எடுத்துக்கொண்டார்கள். சிங்களத்தையும் தமிழையும்விட, ஆங்கிலம் இரண்டாவதுமொழிப் பாடமாக வைத்திருந்தும் நூற்றுக்கு ஆக 7 பேர்தான் ஆங்கிலத்தை விரும்பிப் படித்திருக்கிருர்கள். ஆங்கிலப் போதன மொழியாயிருந்த காலத்தில் உள்ள பாடப்புத்தகங்களே சென்றவருடமும் இருந்தன. அப்படியிருந்தும் இவ்வளவு பெருந்தொகையான மாணவர்கள் ஆங்கிலம் எடுக்காததேன்?

சிங்களத்தை இரண்டாவது மொழிப் பாடமாக எடுக்கும் தமிழ் மாணவர்களும், தமிழைக் கற்கும் சிங்கள மாணவர்களும் அதிகமாகி வருகிருர்களா? அல்லது ஆங்கிலத்தை இனிமேல் படிப்பதில் பிரயோசனமில்லைஎன்றுஅதைகைவிட்டு விட்டார்களா? தெரியவில்லை.

தேசிய அரசாங்கம் ஏற்பட்டபின் ஆங்கிலப் படிப்பின் அவசியத்தை மந்திரி இரியகொல்லை முதலாக பல பிரமுகர்கள் வற்புறுத்தியிருக்கிருர்கள். முந்திய அரசாங்கங்கள் போனபோக்கில் ஆங்கிலம்சல்லிக்குதவாதென்ற ஒரு தவருன மனப்பான்மை மாணவர்களிடத்திலும் பெற்ருேரிடத்திலும் ஏற்பட்டிருக்கக்கூடும். அந்தநிலைமை மாறி இப்பொழுது புத்தித் தெளிவு ஏற்பட்டிருப்பதால் ஆங்கிலம்பயிலும் மாணவர்களின் தொகை இனிமேல் அதிகரிக்கலாம்.

ஆங்கிலத்துக்கு மட்டும் இந்தக்கதி நேரவில்லை. சமஸ்கிருதம், பாளி, லத்தீன் முதலிய பிறமொழிகளைக் கற்கும் மாணவர்களின் தொகையும் பலவாறு குறைந்துவிட்டன். தமிழ் படிப்புக்கு சமஸ்கிருதமும், சிங்களத்துக்கு பாளியும், ஆங்கிலத்துக்கு லத்தீனும் எவ்வளவு இன்றியமையாதவை என்று எந்த ஆசிரியரைக் கேட்டாலும் சொல்லுவார்.

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து 1946 மாணவர்கள் இப்பரீட்சைக்கு தோற்றினுர்கள். இலங்கை முழுவதிலுமே மொத்தம் 213 பேர் தான் தமிழ் மேல் படிப்பை விரும்பினுர்களாயின் யாழ்ப்பாண மாணவர்

(6-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுகிறது

யாழ்ப்பாணம் பெரிய கடையைச் சேர்ந்த ஒரு வர்த்தகர் காலையில் டெலிபோன் செய்தார். தம் கடைக்குப் பக்கத்திலே பல பொலிசார் ஜீப்புகளில் வந்து கடையில் நுழைந்து புளி, மல்லி இவற்றை ஆளுக்கொரு ராத்தல் வீதம் விற்கச் செய்வதாயும், ஏகப்பட்ட கூட்டமென்றும், வாங்கியவரே பல தடவைகளாக வந்து இவற்றை வாங்குவதாகவும், ஒரே நாளில் எல்லாவற்றையும் வாரிவிட்டால் மறுநாள் என்ன வியாபாரம் செய்வதென்றும் கேட்டார். வியாபாரி என்ருல் ஏதோ பகற்கொள்ளைக்காரனென்ற அவமதிப்பு மக்களிடை ஏற்படுவதாக இருப்பதாயும், இந்தத் தொழிலுக்கிருந்த மரியாதையே போய்விட்டதென்றும் யாரோ ஒரு சிலர் செய்யும் தவறுக்காக எல்லா வியாபாரிகளும் இந்த அவமதிப்புக்கும் இம்சைக்கும் உள்ளாகவேண்டியிருக்கிறதென்றும் இந்தத் தொழிலுக்கே ஒரு முழுக்குப் போட்டுவிடலாமென்று தோன்றுவதாகவும் மிக வருத்தத்துடன் கூறினுர்.

இங்கு வியாபாரிகள் சங்கம் இருக்கிறதோ தெரியவில்லை. இல்லாவிட்டால் ஒரு சங்கம் அமைத்து, தங்கள் நியாயமான குறைகளை அதிகாரிகளுக்கு அவ்வப்போது அறிவிக்கலாம். தங்களில் யாரும் பதுக்கல், கொள்ளை லாபம் முதலியவற்றைக் கைக்கொள்ளாமல் தங்களுக்குள் கட்டுப்பாடு செய்துகொள்ளலாம். பொதுமக்களுக்கு உதவியாகவும் நாணயமாகவும் நடக்கும் வர்த்தகம் நல்லதோர் சமூக சேவையாகும்.

ஃ ஃ ஃ

ஒரு பத்திரிகையில் படமொன்று பார்த்தேன். இந்தோனேஷிய ஜனுதிபதி சுகர்ணேவின் மெய்க்காவலர் படைக்குத் தலைவராக இருந்த லெப்டினென்ட் கர்னல் உண்டாங் என்பவரின் இரு கைகளுக்கும் விலங்கிட்டு, ஜாகர்த்தா சிறையிலே இராணுவத்தினர் அவரது இரு கைகளையும் பிடித்துக்கொண்டிருக்கிருர்கள். அவர் தலையைக் குனிந்துகொண்டு வெட்கத்திலும் துக்கத்திலும் ஆழ்ந்திருக்கிருர். பார்க்க மிகப் பரிதாபமாக இருந்தது. என்னே விதியின் விளையாட்டு! எப்படி இருந்தவர், எப்படி இருக்கிருர். இதெல்லாம் நமக்கு ஒரு பெரிய பாடமல்லவா?

மீண்டும் அவர் நிலை மாறினுலும் மாறலாம். யார் கண்டார்கள்!

ஃ ஃ ஃ

திங்கட் கிழமையன்று இரவு எல்லாரும் உபவாச விரதமிருக்க வேண்டுமென்று இந்தியப் பிரதமர் லால்பகதூர்சாஸ்திரி கேட்டு, தாமே முன்மாதிரியாக விரதமிருக்கிருராம். காரணம் யுத்தகாலத்தில் உணவில் சிக்கனம் ஏற்படுத்தத்தான். அங்கு எவ்வளவு பேர் இந்த விரதமிருக்கிருர்கள் என்பது தெரியவில்லை.

திங்கட்கிழமை என்று தெரிந்ததும் காலையிலேயே வயிறு 'பக பக' என்று அதிகம் பசிக்க ஆரம்பித்துவிடுவதாக ஆனந்தவிகடனில் ஒரு ஹாஸ்யம் வெளியாகியுள்ளது. விரதநாளில் தான் சோதனைபோல் அதிகம் பசிக்கும்.

ஸ்ரீரங்கத்திலே கோவிலில் திங்களன்று இரவு சுவாமிக்கும் நிவேதனம் இல்லாமல் செய்து விட்டார்களாம்! இதைப்பற்றி அங்கு பலத்த ஆட்சேபம் கிளம்பியதும்,

(6ம் பக்கம் பார்க்க)

# ‘1967க்குமுன் உலக ஆயுதபரிகரண மகாநாடு வேண்டும்’

## ஐ. நா. அரசியல் கமிட்டி நிறைவேற்றிய தீர்மானம்

### சீனுவும் பங்குபற்றும்

நியூயோர்க், நவ 24

**1967-ம் ஆண்டுக்கு முன் உலக ஆயுதப் பரிகரண மகாநாடு ஒன்றைக் கூட்டவேண்டும் என 33 நடுநிலைமை நாடுகள் கொண்டுவந்த தீர்மானத்தை ஐ.நா. அரசியல் கமிட்டி நிறைவேற்றியது.**

இத்தீர்மானப்படி சீனு உட்பட எல்லா உலகநாடுகளும் இம்மகாநாட்டில் கலந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

தீர்மானத்திற்குச் சாதகமாக 91 வாக்குகள் கிடைத்தன. எதிராக எவரும் வாக்களிக்கவில்லை. பிரான்ஸ், போர்மோஸா ஆகிய நாடுகள் வாக்களிக்கவில்லை.

23 நாடுகள் ஆஜராகவில்லை. இத்தகைய ஒரு ஆயுதப் பரிகரண மகாநாட்டில் சீனு பங்குபற்றுவதை அமெரிக்கா ஆதரித்தது.

உத்தேச ஆயுதப்பரிகரண மகாநாட்டில் சீனு கலந்து கொள்ள வாய்ப்பிருந்த போதிலும், இதனுல் ஐ.நா. அதை அங்கீகரித்திதாகாது என நியூயோர்க் வட்டாரங்கள் கூறின.

இதற்கிடையில் போர்த்துக்கல்மீது பூரண வர்த்தக பகிஷ்காரம் நடத்தவேண்டுமென்ற ஆபிரிக்க நாடுகளின் கோரிக்கையை பாதுகாப்பு சபை நிராகரித்திருக்கிறது.

ஆனுல் போர்த்துக்கல்தன் காலனிகளுக்கு சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டுமென்றும், இதற்கான பேச்சுக்களை அரசியல் கட்சிகளுடன் ஆரம்பிக்க வேண்டுமென்றும் சபை கேட்டுக்கொண்டிருக்கிறது.

தேசிய எழுச்சியைஅடக்குவதற்கு உபயோகமாகும் ஆயுத சப்ளையை போர்த்துக்கலுக்கு நிறுத்துமாறு சபைமேலும் கேட்டுக்கொண்டது.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஹாலந்து ஆகிய நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

## ரொடீஷியாவில் சீனு நேரடியாக தலையிடுமாம்

கெய்ரோ, நவ. 24

ரொடீஷியா ஒருதலைப்பட்ச சுதந்திரத்தை நிறுத்துவதில் ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனம் தவறுமானுல், தாம் நேரடியாக ரொடீஷிய தேசீயவாதிகளுக்கு உதவப் போவதாய் சீனு பல ஆபிரிக்க நாடுகளுக்குத் தெரிவித்திருக்கிறது.

ரொடீஷியாவில் பலாத்காரப் பிரயோகம் செய்தால் ஆபிரிக்க நாடுகளை சீனு ஆதரிக்கும் என்றும், ஆனுல் ஆபிரிக்க நாடுகள் எதுவும் செய்யத் தவறினுல் தேசீயவாதிகளுக்கு சீனு நேரடியாக உதவியளிக்கும் என்றும் கூறப்பட்டிருக்கிறதாம்.

“ஆபிரிக்க நாடுகள்ரொடீஷியாவில் தலையிடுவதுமட்டுமின்றி, ரொடீஷிய தேசியவாதிகளுக்கு உடனடியாக ராணுவப் பயிற்சியளித்து ஆயுதங்களை அளிக்க வேண்டும் என்பது சீனுவின் விருப்பம். ஆயுதங்களையும் உபகரணங்களையும் தேசியவாதிகளுக்களுப்ப சீனு தயாராக இருக்கிறது” என்றும் ஆபிரிக்க நாடுகளுக்குக் கூறப்பட்டிருக்கிறதாம்.

ஆனுல் சீனு அல்லது ரஷ்யா நேரடியாகத் தலையீடு செய்யக்கூடும் என்பது பற்றி ஆபிரிக்க நாடுகள் கவலையடைந்திருக்கின்றன எனக் கூறப்படுகிறது. அப்படி நடைபெற்றுல் ஆபிரிக்க நாடுகள் தவிர்க்கவிரும்பும் கெடுபிடி யுத்தம் ஆரம்பமாகக் கூடுமென அஞ்சப்படுகிறது. (பி. டி. ஐ.)

## டொமினிக்கனில் புரட்சி தோல்வி

சாந்தாடொமிங்கோ, நவ. 24

டொமினிக்கன் குடியரசில் அரசாங்கத்தைக் கைப்பற்ற புதிய முயற்சி நடைபெற்றதாயும் தோல்வியுற்ற இப்புரட்சியின் போது 30 ராணுவஸ்தர்கள் கைதுசெய்யப்பட்டதாயும் அறிவிக்கப்படுகிறது.

## பயங்கரவாதிகள் அட்டூழியம்

ஜார்ஜ்டவுன், நவ.24

பிரிட்டிஷ் கயானுவில் மோரண்ட் துறைமுகப்பகுதியில் நீக்ரோக்கள் வசிக்கும் வீடுகள்மீது இந்தியப் பயங்கரவாதிகள் குண்டுகளை வீசியதால் சிலர் காயமடைந்தனர்.

## ஹோசிமின் நிபந்தனை

ஹானேய், நவ.24

வியட்னுமில் அமைதியை ஏற்படுத்த நிபந்தனையற்ற முறையில் பேச்சு நடத்த வடவியட்னும் ஒருபோதும் சம்மதிக்காதென தலைவர் ஹோசிமின் மீண்டும் அறிவித்திருக்கிறுர். முதலில் அமெரிக்கத்துருப்புகள் அங்கிருந்து வெளியேறவேண்டுமென அவர் கூறினுர்.

## பாகிஸ்தான் குற்றச்சாட்டு

ராவல்பிண்டி, நவ.28

காஷ்மீரில் 15 மைல் நீள எல்லைக்கோடு நெடுகிலுமுள்ள முஸ்லிம்களை இந்தியத்துருப்புக்கள் வெளியேற்றியிருப்பதாயும், அங்கு நிலவெடிகளை விதைத்திருப்பதாயும், மெஷின் துப்பாக்கி நிலையங்களை அமைத்திருப்பதாயும் இங்கு அறிவிக்கப்பட்டது. தினமும் 600முஸ்லிம்கள் அஸாத் காஷ்மீருக்குள் கொடுமை பொறுக்காமல் ஓடிவருவதாக மேலும் அறிவிக்கப்பட்டது.

## சங்கீத நிகழ்ச்சி ரூ. 5 லட்சம் வசூல்

புதுடில்லி, நவ. 24

இந்திய திரைப்படத் தொழிலினரின் தேசியபாதுகாப்புக் கமிட்டி ஆதரவில் டில்லியில் நடைபெற்ற சங்கீத நிகழ்ச்சியில் 150க்கு மேற்பட்ட பிரபல நட்சத்திரங்களும், பின்னணிப் பாடகர்களும் கலந்து கொண்டனர். இதில் பாதுகாப்புநிதிக்கு ரூ. 5 லட்சம் வசூலாயிற்று.

## ஐ.நா.வில் வில்சன் பேசுவார்

லண்டன், நவ.24

அடுத்த மாதம் பிரிட்டிஷ் பிரதமர்திரு. வில்சன் அமெரிக்கா செல்வார். அமெரிக்க தலைவர்களுடன் பேச்சுநடத்துவதுடன், ஐ. நா. விலும் அவர் உரை நிகழ்த்துவார்.

## கிளர்ச்சியை நிறுத்துக

வாரணுசி, நவ.24

காசி பல்கலைக்கழகமாணவர்கள், பல்கலைக்கழகத்தின் பெயர் சம்பந்தமாக தங்கள் கிளர்ச்சியைக் கைவிடவேண்டுமென உபவேந்தர் கேட்டுக்கொண்டிருக்கிறுர்.

## மனைவியின்தலையுடன் சரணடைந்தார்

மதுரை,நவ.24

மதுரைக்கருகே 30 வயதான ஷண்முகத்தேவர் என்பவர் தனது 22 வயது மனைவியின் தலையை வெட்டிக் கையில் எடுத்துக்கொண்டு, ரத்தம் கொட்டும் அரிவாளுடன் பொலிஸ் நிலையத்தில் ஆஜரானுர்.

கோபித்துக் கொண்டு அண்ணன் வீடு சென்றிருந்த குமாரி என்ற அந்தப்பெண், தன்னுடன் வர மறுக்கவே அவர்கொலைசெய்தார்எனக் கூறப்படுகிறது.

## சீன பகைமை அதிகரிக்கிறது

புதுடில்லி, நவ. 24

சீனுவின் சமீப ஊடுருவல்கள், இந்தியா மீது அந்த நாட்டின் பகை உணர்ச்சி அதிகரித்திருப்பதையே காட்டுகிறது என திரு. சாஸ்திரி இங்கு கூறினுர்.

காஷ்மீர்பற்றி அமெரிக்கா இந்தியாவின் கருத்தை ஏற்காத போதிலும், அமெரிக்கர்களின் பேச்சும் எழுத்தும் அங்கு சர்வஜனவாக்கெடுப்புக்கு மாறுகப் போய்க் கொண்டிருப்பது தெளிவாகத் தெரிகிறதென்றும் திரு. சாஸ்திரி கூறினுர்.

தாம் அமெரிக்கா செல்லப் போவதாயும், ஆனுல் திகதி இன்னும் நிச்சயிக்கப்படவில்லை என்றும் அவர் மேலும் கூறினுர்.

## சீனரின் இரு ஊடுருவல்கள்

புதுடில்லி, நவ. 24

லடாக்கிலும், வடசிக்கிமிலும் சீனு இரு ஊடுருவல்களை நடத்தியிருப்பதாய்இந்தியா புகார் செய்திருக்கிறது. லடாக்கில்கடந்த வெள்ளிக்கிழமை 60 சீனர்கள் இரு கனரக வண்டிகளில் ஊடுருவல் செய்து, மலையின் கிழக்குச் சரிவில் நிலைகொண்டார்கள் என்றும், இவர்கள் விலகிச் செல்லவேண்டும் என்றும் இந்தியா கேட்டிருக்கிறது.

கடந்த ஞாயிற்றுக் கிழமை 30 ஆயுதம் தாங்கிய சீனர்கள் வட சிக்கிமில் 1500யார் ஊடுருவிவந்தார்கள். ஆனுல் இந்திய ரோந்துப் படையைக் கண்டபின் விலகிச் சென்றுவிட்டார்கள்.

## 3 பிரிட்டிஷார் கைது

ஷில்லாங், நவ. 24

அரசாங்கத்துக்கு விரோதமான நடவடிக்கையிலீடுபட்டதாக சந்தேகத்தின் பேரில் 3 பிரிட்டிஷ்தோட்டத்துரைமார்கள் அஸ்ஸாமிலுள்ள வடக்கு லட்சுமி பூரில் கைது செய்யப்பட்டனர். இவர்கள் பிரிட்டனுக்கு வெளியேற்றப்படுவார்கள். கிராமப் பாதுகாப்புக் கோஷ்டி ஒன்றை இவர்கள் துப்பாக்கியால் தாக்கினராம்.

# ரொடீஷியாவில் வெற்றிகர பொது வேலைநிறுத்தம்

## கவர்னர் கிப்ஸ் ஓய்வுபெறுவார்

### ஸாம்பியாவில் வெள்ளையர் மீது தாக்குதல்

ஸாலிஸ்பரி, நவ. 24

**ரொடீஷியாவில் ஸ்மித் கலக ஆட்சியை எதிர்த்து நேற்று நடைபெற்ற பொது வேலைநிறுத்தம் மிக வெற்றிகரமாக நடைபெற்றதென்றும், 40 சதவிகித தொழிலாளரே வேலைக்குச் சென்றனர் என்றும் அறிவிக்கப்பட்டது.**

கடைகளும், ஹோட்டல்களும் மூடப்பட்டிருந்தன. பிரபல ஹோட்டலில் பிரயாணிகள் தாங்களே படுக்கைகளை விரித்துக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது என்றும் அறிவிக்கப்பட்டது.

புலவாயோ நகரில்வேலைக்குச் சென்றவர்களைத் தடுத்த தொழிலாளர்மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருஆபிரிக்கர் கொல்லப்பட்டார். மற்றோர் நகரில் ஒரு ஆபிரிக்கர் துப்பாக்கிச் சூட்டினுல் காயமடைந்தார்.

**ஸாம்பியாவில்**

அருகிலுள்ள ஸாம்பியா நகரமான லிவிங்ஸ்டனில் ஐரோப்பியர்கள் தாக்கப்பட்டார்கள். அவர்களின் வீடுகளும், கடைகளும் நொறுக்கப்பட்டன.

**கிப்ஸ ஓய்வு பெறுவார்**

இதற்கிடையில் ரொடீஷிய கவர்னர் கிப்ஸ் ஓய்வு பெற பிரிட்டன் அனுமதிக்கும்என அறிவிக்கப்பட்டிருக்கிறது. வயது காரணமாக அவர் இவ்வாறு அனுமதிக்கப்படுவார் என பிரிட்டிஷ் அரசாங்கம்கூறியிருக்கிறது.

## பேயை தேடினர்

பிரிஸ்டேன், நவ. 24

இங்குள்ள நகரப் பூங்கா ஒன்றில் பேயைத்தேடும் வேலையில் ஈடுபட்டிருந்த 5000 பேர்கள் கைகலப்பில் ஈடுபடவேண்டிய நிலை ஏற்பட்டது.

தலையும், கைகளும் இன்றி ஒரு கால் துண்டிக்கப்பட்ட முண்டம் ஒன்றைப் பார்த்ததாக கடந்த பல நாட்களாக மக்கள் புகார் செய்ததை அடுத்து இத்தேடுதல் நடைபெற்றது.

6 மணி நேரம் பூங்காவில் கூட்டமாய் இருந்த இளைஞர்கள் பொலிஸ்கார் ஒன்றுக்கு கல்வீசி, சுட்டு, ஓடும் ரயில்கள் மீது கற்களைவீசி, டெலிவிஷன் காரர்களைச் சூழ்ந்து கொண்டனர். 4 இளைஞர்கள் கைதாயினர்.

சரியாக 5 ஆண்டுகளுக்கு முன் ஒரு மனிதன் தன் தலையைத் துண்டித்துக்கொண்டு ஓடும் ரயிலின் முன் பாய்ந்த அதே இடத்தில் தான் பேயைக்கண்டதாக அவர்கள் கூறினர். பி. டி. ஸி.

## களைபிடுங்கும் இயக்கம்

யாழ்ப்பாணம், வியா.

குஞ்சுப்பரந்தன் பயிர்ச் செய்கைக் குழுவின் ஆதரவில் களைபிடுங்கும் இயக்கம் கரைச்சிப்பகுதிக் காரியாதிகாரி தலைமையில் சென்ற செவ்வாய்க்கிழமை திரு. கோ. பரமசிவத்தின் கமத்தில் ஆரம்பமாகியது. இவ்விழாவில் குழு எல்லைக்குள் இருக்கும் பாடசாலை மாணவரும் கமக்காரர்களும்பங்குபற்றியதுடன் கமத்தொழிற் சேவை இலாகாப் பெரும்பாக உத்தியோகத்தர் திரு: லிங்கராசா மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

ஃ ஃ ஃ

சுழிபுரம், புதன்

சுழிபுரம் ஐக்கியசங்க வித்தியாசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் சுழிபுரம், காளுவன், நீத்துவான் ஆகிய வயல்களில் களைபிடுங்கினர். விவசாய உத்தியோகத்தர்கள் சிலரும் இவ்வியக்கத்தில் கலந்துகொண்டனர்.

### பாகிஸ்தானில்

## அடிப்படை உரிமை நிறுத்தம்

ராவல்பிண்டி. நவ. 24

இந்தியா - பாகிஸ்தான் தகராறு நீடிக்கும் வரை பாகிஸ்தானில் அடிப்படை உரிமைகள் நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றன. இது சம்பந்தமாக அரசியலமைப்புச் சட்டத்தை. பல எதிர்ப்புகளுக்கிடையே அரசாங்கம் திருத்தியிருக்கிறது.

## மாஸ்கோவில் பூட்டோ

மாஸ்கோ, நவ. 24

பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி திரு. பூட்டோ ரஷ்ய வெளிமந்திரி திரு. குரோமிகோவுடன் பேச்சு நடத்தியதாக டாஸ் செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

## சாஸ்திரிக்கு பணமாலை

புதுடில்லி, நவ. 24

டில்லி மாதர்கள் நேற்று ஒரு வைபவத்தில் கரன்சி நோட்டுகளைக் கொண்ட நூற்றுக்கணக்கான மாலைகளை திரு. சாஸ்திரிக்கு அணிவித்தார்கள். தேசியபாதுகாப்பு நிதிக்காக இவை வழங்கப்பட்டன.

## சமாதான நீதவான்

வல்வெட்டித்துறை, புதன்

இலங்கை அரசினர் புகையிரத இலாகாவில் உயர்தர அதிகாரியாகவிருந்து ஓய்வு பெற்றவரும், பல வருடகாலமாகப் பருத்தித்துறை நகரசபையில் உறுப்பினராக இருந்துவந்தவரும், தும்பளையைச்சேர்ந்தவருமான திரு ஏ. சபாரத்தினம் சமாதான நீதவானுக நியமிக்கப்பட்டுள்ளார்.

## ‘பட்டினியை ஒழிக்க உழைக்க வேண்டும்’

வவனியா, வியாழன்

‘நாட்டிலுள்ள பட்டினியைப்போக்கவும், வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கவும் நாம் நம்மாலானவற்றைச் செய்ய வேண்டும். தமது கிராமத்து மக்களுக்கு வேண்டிய உடைகளுக்குத் தேவையான துணியையாகுதல் நாம் தயாரிக்க முயற்சி மேற்கொள்ள வேண்டும்’ என வவனியா நகரசபை அங்கத்தவர் ஜனுப் பி. எஸ். அப்துல்லா கோயில்குளம் சமூகசேவாசங்கக் கூட்டத்தில் பேசுகையில் கூறினுர்.

நாட்டின் பட்டினியை ஒழிக்கும் திட்டத்திற்கு சங்கம் தன்னாலானவற்றைச் செய்ய முன்வர வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

# மொழி பெயர்ப்பாளர் பரீட்சையில் மாற்றம்!

யாழ்ப்பாணம், வியா.

1957-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மொழி பெயர்ப்பாளர் சேவை பொது இணைப்புச் சேவையாக திறைசேரியினுல் இதுவரையும் கணிக்கப்பட்டுவந்தது.

இப்பொது இணைப்புச் சேவைக்கு நடாத்தப்படும் பரீட்சைமூலம் சிங்கள-தமிழ் மொழி பெயர்ப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டுவந்தனர்.

1964 ம் ஆண்டு 14-ந் திகதி நவம்பர் மாதம் திறைசேரியினுல் நடாத்தப்பட்ட பரீட்சையில் சித்தி பெற்றவர்களின் முடிவுகள் இன்னமும் வெளியிடப்படவில்லை. ஆனுல் அந்த பரீட்சை முடிவுகள் வெளிவருவதற்கு முன்னர் டிசம்பர் மாதம் 18-ந் திகதி இரண்டு முதலாம்தர சிங்கள மொழி பெயர்ப்பாளர்களின் காலிஸ்தானங்களை நிரப்புவதற்காக ஒரு பரீட்சையை நடாத்துவதற்கு திறைசேரி நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

1957-ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை இப்பரீட்சைக்கு தமிழ்-சிங்கள அபேட்சகர்கள் ஒருபொதுப் பரீட்சைமூலமே தெரிவு செய்யப்பட்டுவந்தனர்.

ஆனுல் திறைசேரி 1/23/23/2/ ஜி 26-10-65 திகதியிடப்பட்ட சுற்று நிருபத்தின்மூலம் மொழிபெயர்ப்பாளர் சேவைக்கு சிங்கள மொழிபெயர்ப்பாளர்களைத் தெரிவு செய்வது இதுவே முதன் முறையாகும்.

REGAL—JAFFNA
NOW SHOWING
Erno Crisa
YoKo Tani
IN
FIRE IN THE FLESH
(Eastman Color)

## 'அரசாங்கத்தின் மீது பூரண நம்பிக்கை'

கண்டி, புதன்

"ஆளும் கட்சிதான் தமிழரின் உரிமைகளை வழங்க வேண்டுமாதலால் இருபது தமிழ் பிரதிநிதிகளும்நான்கு செனட்டர்களும் அரசாங்கத்தின் மீது பூரண நம்பிக்கை வைத்திருக்கிறுர்கள்'' என்று கண்டி சைவமகா சபை மண்டபத்தில் நேற்று நடைபெற்ற சபையின் 40-வது ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பேசுகையில் ஊள்ளூராட்சி மந்திரி திரு. எம். திருச்செல்வம் குறிப்பிட்டார்.

வெகுவிரைவில் தமிழ் மொழி உரிமை மசோதா பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அதன் மூலம் பிரச்னை தீர்க்கப்படும் என நம்புவதாகவும் மந்திரி மேலும் தெரிவித்தார்.

இராசவாசல் முதலியார் நா. கனகநாயகம், முதலியார் கே. வி. அரங்கநாதன், திரு. பி. பாலசிங்கம் ஆகியோரின் உருவப்படங்கள் திரைநீக்கம் செய்யப்பட்டன.

பல பிரமுகர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## அரசியலுக்கு முழுக்கு

காலி, புதன்

41 வருடங்களுக்கு மேலாக கொடகொட கிராம சபையின் அங்கத்தவராகவும் தலைவராகவுமிருந்த முன்னுள் மந்திரி திரு. டி. எஸ். குணசேகரா தமது நீண்டகால அரசியல் வாழ்க்கைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துக் கொண்டார்.

சென்றவாரம் காலி உதவி தேர்தல் கந்தோரில் தேர்தலுக்காக நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டபோது, திரு. குணசேகரா நியமனப்பத்திரம் தாக்கல் செய்யாது ஒதுங்கிக் கொண்டார்.

இலங்கை உள்ளூர் அரசியலில் தனக்கென்றேர் சரித்திரத்தை திரு. குணசேகரா உருவாக்கியிருக்கிறுர் என்றே சொல்லலாம். நாற்பது வருடகாலத்துக்கு முன் கொடகொட, தெரிவு செய்யப்பட்ட கிராமசபை அங்கத்தவர்களிடம் ஒப்படைக்கப்பட்டபோது, துடிப்பும், வாலிபமுள்ள இளம் குணசேகரா கொடகொட கிராம சபைக்குள் ஒரு அங்கத்தவராக நுழைந்தார். இதன் பின் கொடகொட கிராம சபையின் இரண்டாவது கிராமசபைத் தலைவராக பதவி ஏற்றுக் கொண்டார்.

1947-ம் ஆண்டு உடுஹம தொகுதிக்குப் போட்டியிட்ட திரு. குணசேகரா தம்முடன் போட்டியிட்ட ஏழு அபேட்சகர்களையும் தோற்கடித்து ஜனப்பிரதிநிதிசபை யு. என். பி. அங்கத்தவரானுர். 1952லும் அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டார். 1956ல் மக்கள் ஐக்கிய முன்னணியில் போட்டியிட்ட திரு. குணசேகரா உடுஹமதொகுதிக்கு மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். 1960 ஜூலை தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் போட்டியிட்டு ஹப்றடுவா தொகுதி அங்கத்தவரானுர். அந்தச் சமயம், இவர் சமூகசேவை மந்திரியாக நியமிக்கப்பட்டார்.

## 'நாடு பிளவுபடும்'

கம்பஹா, புதன்

"தமிழர்களுக்கு மாவட்ட சபைகள் அமைக்கப்பட்டால் வடக்கிலும் கிழக்கிலும் சிங்களத்துக்கு இடம் கிடையாது. இதனுல் நாடு பிளவுபட்டுவிடும்'' என்று திரு. ஆர். ஜி. சேனநாயக்கா கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

சிங்களத்தை நாட்டின் தேசியமொழியாக்கவேண்டுமென்பதே கூட்டரசாங்கத்தின் கொள்கை எனவும் ஆனுல் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழையே உத்தியோக மொழியாக்க வேண்டும் என திருவாளர்கள் செல்வநாயகம், தொண்டமான போன்றவர்கள் கோருகிறுர்களெனவும் டட்லி—செல்வா ஒப்பந்தம் ஆபத்தானதென்றும் இப்பற்றி மகாநாயக்க தேரோக்களே அச்சம் தெரிவித்துள்ளார்களெனவும் குறிதுபிட்டார்.

## 'வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம்'

பையாகலே, புதன்

'அரசாங்கத்துக்கு எதிராக அதன் எதிரிகள் என்ன குற்றச்சாட்டைத் தெரிவித்தாலும் தேர்தல் வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்றியே தீரும் எனவும் ஆனுல் கடந்த அரசாங்கம் குழப்பியடித்து வைத்திருக்கும் நிர்வகத்தை முதலில் சீர்படுத்திய பின்னரே தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற அரசாங்கம் உத்தேசித்துள்ளது.' என பேருவளை எம். பி. திரு. மாக்கான் மரைக்காயர் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

## கி. மு. சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், வியாழன்

உருத்திரபுரம் கிராம முன்னேற்றச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் மேற்படி சங்க மண்டபத்தில் காரியாதிகாரி திரு. சி. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

சங்கத்தின் வளர்ச்சிபற்றியும், பஞ்சாயம், தொண்டர் படை ஆகியவற்றின் கடமைபற்றியும் தலைவர் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

அடுத்த வருடம் தமது கிராமமுன்னேற்றச் சங்கம் செய்யவேண்டிய வேலைத்திட்டங்கள், நெசவு நிலையம் அமைத்தல் போன்ற விடயங்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டன.

பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: நா. சுப்பையா; உபதலைவர் தி. துரைராசா; காரியதரிசி சு. பேராதரசிங்கம்; உபகாரியதரிசி மு. தம்பிமுத்து; தனுதிகாரி க. நவரத்தினம்; கணக்குப் பரிசோதகர் கா. நாகலிங்கம். ஆறுபேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது. பஞ்சாய உறுப்பினர்களாக ஐவர் தெரிவுசெய்யப்பட்டனர்.

## கங்கையை வடக்கே திருப்ப.....

வவனியா, வியாழன்

மகாவலிகங்கையை வடக்கே திருப்புவதற்கான சாத்தியக்கூறுகள்பற்றி தெரிந்து கொள்ளும் பொருட்டு விவசாய பொருளாதார நிபுணர் திரு. கா. சதாசிவம் நேரில் சிலபகுதிகளுக்கு விஜயம் செய்து பார்வையிட்டார்.

புத்தளம், அநுராதபுரம், செட்டிகுளம் பகுதிகளுக்கு விஜயம் செய்த இவர் மகாவலிகங்கையை வடக்கே திருப்புவதனுல் ஏற்படும் செலவுகளை, எப்படியான பயிர் செய்வதன் மூலம் திருப்பிஎடுக்கலாமென்பது போன்ற பல விஷயங்கள் பற்றி ஆராய்ந்தார்.

## அங்குரார்ப்பணக் கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

கந்தர்மடம் இந்து இளைஞர்சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது. யாழ்ப்பாண மாநகரசபை அங்கத்தவர் திரு. எஸ். நாகராசா சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

யாழ்மாவட்ட கூட்டுறவுப் பரிசோதகர்கள் திரு எஸ். பாலசிங்கம், திரு வி. கந்தையா ஆசியோரும் கலந்து கொண்டனர்.

இச்சங்கத்தின் போஷகராக திரு எஸ். நாகராசாவும் தலைவராக திரு து. கோபாலசிங்கமும் இணைக் காரியதரிசிகளாக திரு நா, அருளானந்தம், திரு ப. காயாரோகணசிவம் ஆகியோரும், தனுதிகாரியாக திரு. ந. சிவசுப்பிரமணியமும் தெரிவு செய்யப்பட்டனர். ஒன்பதுபேர் கொண்ட நிர்வாகசபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## அரசாங்கத்துக்கு பாராட்டு

மாரவில்ல, புதன்

'அதிக உணவு பயிரிடும் பொருட்டு அரசாங்கம் நடத்தி வரும் இயக்கம், நாட்டு உணவுப் பொருள் உற்பத்தியை அதிகரிப்பதுடன், மக்களுக்கு தாம் நாட்டின் சுதந்திர பிரஜைகள் என்ற உணர்ச்சியையும் வளர்க்கும் என வண நாரவில்ல தர்மரத்ன தேரோ கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டு அரசாங்கத்தைப் பாராட்டினுர்.

## இடமாற்றம்

வவனியா, வியாழன்

கொழும்பு தந்திக் கந்தோரில் உதவி போஸ்ட்மாஸ்டராகக் கடமையாற்றிய திரு. வி. நாகராஜா வவனியா தபாற் கந்தோடுக்கு இம்மாதத்திலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

5-வது வெற்றி வாரம்!

கிங்ஸலி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) ராஜ் (நீர்கொழும்பு)
தீவொளி (நுவரேலியா) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2; 6, 9-30 மணிக்கு


தென்னுட்டில் 30 வாரங்களுக்குமேல் ஓடி திரைப்பட வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கும் மகத்தான வெற்றிச் சித்திரம்!

எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
(இருவேடங்களில்)
ரங்கராவ், நம்பியார், தங்கவேலு, ரத்னு, பண்டரிபாய், நாகேஷ், மாதவி, விஜயலக்ஷ்மி
நடித்த



விஜயா கம்பைன்ஸ்
எங்கவீட்டுப் பிள்ளை
(ஈஸ்மென்க

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் பஞ்சரத திருப்பணி நிதி



நன்கொடையை வழங்கினீர்களா வண்ணை வைத்தீஸ்வரன் பஞ்சரதத் திருப்பணிக்கு?
இன்றேல் இன்றே நன்கொடை வழங்கி ஊக்குவித்தல் அடியார் கடமையாகும்.

தனுதிகாரி,
தேர்த் திருப்பணிச்சபை,
தேவஸ்தான காரியாலயம,
வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்,
வண்ணுர்பண்ணை, யாழ்ப்பாணம்.

## விளம்பரம்

### சுன்னுகம் பட்டினசபை சோலைவரி

1965ம் ஆண்டு 2-ம்கந்தாயத்திற்குரிய சோலைவரியை பட்டினசபைக் கந்தோரில் அல்லது வரியறவிடுபவரிடம் 14-12-65க்கு முன் செலுத்திப் பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொள்ளவம். குறிப்பிட்ட திகதிக்குள் வரி செலுத்தத் தவறின் கூடுதலாக 10வீதவிருந்துப்பணமும் வரிப்பணத்துடன்சேர்த்து வி ப்படும் என்பதை சுன்ணுகம் பட்டினசபை வரியிறுப்போருக்கு தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

பொ. நாகலிங்கம்,
தலைவர்,
பட்டினசபை சுன்ணுகம்.
பட்டினசபைஅலுவலகம்,
சுன்ணுகம், 23-11-65.
1275

### கேள்வி விளம்பரம்
#### வள்ள ஒப்பந்தம்

கேரதீவு சங்குப்பிட்டி ஆயத்துறையில் ஒரு இயந்திர வள்ளமும் ஒரு மரவள்ளமும் வைத்துப் பிரயாணிகளை ஏற்றி இறக்குவதற்கு ஒப்பந்தம் கோரப்படுகின்றது.

குறைந்த கேள்விக்காரருக்கேகொடுக்கப்படும். விபரங்கட்குசமாஜக்காரியதரிசியுடன் தொடர்பு கொள்ளவும்.

விண்ணப்பங்கள் 15-12-65க்கு முன் பதிவுத் தபாலில் தலைவருக்கு அனுப்பப்படல்வேண்டும்.

காரியதரிசி,
பூநகரி
1276 ப.நோ.கூ.ச.சமாஜம்

### தேவை
#### கணக்கு லிகிதர்
(Accounts Clerk)

கணக்கு லிகிதர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கல்வித் தராதரங்கள்:**

தமிழ் சிரேஷ்ட தராதரப் பத்திரம் ஆங்கிலம் ஒரு பாடமாகச் சித்தியடைந்திருக்கவேண்டும். ஆங்கிலம் தமிழ் தட்டெழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும். கூட்டுறவுப் பாடசாலையில் பயிற்சி பெற்று சித்தியடைந்திருக்கவேண்டும். கணக்குவைக்கும்முறையில் அனுபவம் வாய்ந்தவர்களுக்கு விசேட சலுகைகள் கொடுக்கப்படும்.

வயது:- 20க்கும் 30க்கும் இடைப்பட்டவராயிருத்தல் வேண்டும்.

பிணை:- ரொக்கம் ரூபா 1000/-

சம்பளம்:- மாதம் ரூபா 150/- (சகல படிகளும் உட்பட)

விண்ணப்பிப்போர் தங்களது சமீபகால இரு நற்சான்றிதழ்களுடன் விண்ணப்பங்களை, செயலாளர், துணுக்காய்ப் பகுதி பல நோக்குக் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் 5-12-65-க்கு முன்னதாக அனுப்பவும்.

த. சிவலிங்கம்,
செயலாளர்,
துணுக்காய்ப் பகுதி
ப. நோ. கூ. சங்கங்களின்,
1277 சமாசம்.

### அடிக்கல் நாட்டுவிழா

வெள்ளவத்தை, புதன்
கொம்பனித் தெரு, சைவ முன்னேற்ற சங்க சமயகுரவர் ஆலய அடிக்கல் நாட்டு விழா வருகிற வெள்ளிக்கிழமை அதிகாலைநடைபெறவிருக்கிறது.

## விளையாட்டுப் பகுதி

### இணுவில் கோஷ்டி வெற்றி

கோண்டாவில், புதன்
கோண்டாவில் கலைவாணி உதைபந்தாட்ட கோஷ்டிக்கும் இணுவில் தேசிய விளையாட்டுக் கழக உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற சினேகித பூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் இணுவில் கோஷ்டி 3—0 கோல்களால் வெற்றியீட்டியது.

கோண்டாவில் சிங்கங்கண்டி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டி பார்வையாளருக்கு ஓர் நலவிருந்தாக இருந்தது. இணுவில் கோஷ்டியின மிகவும் அபாரமாக விளையாடினுர்கள். கோண்டாவில் கோஷ்டியின் தலைவர் திரு. வி. குலசிங்கம் மிகவும் திறமையாக விளையாடினுர். இடைவேளையின் பின்னர், இணுவில் கோஷ்டியின் முன்னணி வீரர்கள் மிகவும் திறமையாக விளையாடி அடுத்தடுத்து மூன்று ,கோல்களைப் போட்டனர். இணுவில் கோஷ்டியின் சார்பில் திரு. ச. குருலிங்கம், செ. நவரத்தினம், எஸ். சிவலிங்கம் ஆகியோர் ஒவ்வொரு கோல் அடித்தார்கள். மிகவும் சிறந்த முறையில் விளையாடிய இணுவில் தேசிய விளையாட்டுக் கோஷ்டியின் தலைவர் திரு. செ. இலகுநாதன் பாராட்டக்கூடியதாக விளையாடினுர். மேற்படி போட்டிக்கு திரு. எஸ் பாலசிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

### 'கலைவாணி' வெற்றி

சண்டிருப்பாய், புதன்
சண்டிருப்பாய் கலைவாணி ஸ்போட்ஸ் கிளப்புக்கும் உடுவில் ஆலடி யங்கஸ்ட்ஸ்ரார் கிளப்புக்கும் இடையில் சினேகிதபூர்வமாக நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியின் போது சண்டிருப்பாய் கலைவாணி ஸ்போட்ஸ் கிளப் 'ஏ' பிரிவு 3—1 கோல்களாலும் 'பி' பிரிவு 2—0 கோல்களாலும் வெற்றி பெற்றது. இப்போட்டிக்கு திரு. இராசரத்தினம், திரு. ரவீந்திரன் இருவரும் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்கள்.

### மனேகரா வெற்றி

முல்லைத்தீவு. புதன்
பருத்தித்துறை அல்வாய் மனேகரா உதைபந்தாட்டக் கோஷ்டி முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியுடன் கலந்துகொண்ட போட்டியில் மனேகரா (1—0) வெற்றியீட்டியது.

மனேகராக் கோஷ்டியின் 'காப்டன்' பாக்கியராசா இடைவேளைக்கு முன் இக் கோலைப்போட்டார். இடைவேளைக்குப் பின் வித்தியானந்தாக் கல்லூரி மிகத்திறமையாக விளையாடி கோல் போடுவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிகள் மனேகராக் கோல் காப்பு வீரர் ஜெயரத்தினத்திடம் பலிக்கவில்லை. கல்லூரிக் கோஷ்டியின் முன்னணி வீரர் துரைராசாவும் மனேகராக்கோஷ்டியின் 'காப்டன்' பாக்கியராசாவும் தங்களின் சிறந்த விளையாட்டால் பார்வையாளரின்பாராட்டுதல்களைப் பெற்றனர்.

இப்போட்டிக்கு ஆசிரியர் திரு. பி. தியாகராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

### ஆசிரியர் கோஷ்டி வெற்றி

யாழ்ப்பாணம், வியாழன்
சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமிடையே நடைபெற்ற காரசாரமான உதைபந்தாட்டப் போட்டியில் எதிர்பாராதவகையில் ஆசிரியர் கோஷ்டி அமோக வெற்றியீட்டியது. ஆசிரியர் கோஷ்டிக்கு திரு. எஸ். பஞ்சலிங்கம் தலைமைவகித்தார். மாணவர் கோஷ்டிக்கு கே. பாலகிருஷ்ணன் தலைமை வகித்தார்.

இடைவேளைக்குமுன் ஆசிரியர் கோஷ்டியைச் சேர்ந்த திரு. எம். கணேசசுந்தரம், திரு. கே. யதுக்குலசிங்கம் ஆகியோர் ஆளுக்கொரு கோலை வெளுத்துவாங்கினர். மாணவர்கள் ஒரு கோலுமே போடவில்லை. இடைவேளைக்குப்பின் திரு. திரு. எஸ். கே. மகாலிங்கம் என்பவர் ஒரு கோலைப் போட்டார். ஆசிரியர் கோஷ்டியின் கோல் காப்பாளரான திரு. எஸ். பஞ்சலிங்கம் அபாரமாகப் பந்தைப் பிடித்தார். அதே வேளையில் மாணவர் கோஷ்டியின் கோல் காப்பாளர் 'கோட்டை' விட்டார் எனினும் இவர்கள் கோஷ்டியில் கே. பாலசுப்பிரமணியம், விஜயகுமார் ஆகிய வீரர்கள் ஆசிரியர்களைத் திணறடித்தனர். போட்டி முடிவில் ஆசிரியர் கோஷ்டி 3—0 கோல்களால் மாணவர் கோஷ்டியை வெற்றியீட்டியது. சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. கே. பரமோர்தயம் மத்தியஸ்தம் வகித்தார்.

### சமவெற்றி

முள்ளியவளை, வியா.
முல்லைத்தீவில் சுற்றுப்பயணம் செய்யும் அல்வாய் மனேகரா உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் முல்லைத்தீவுப்பகுதித் தெரிவுக் கோஷ்டிக்கும் இடையில் நடைபெற்ற போட்டி இரு கோஷ்டிகளும்தலா 3 கோல்கள் போட்டதனுல் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. போட்டி ஆரம்பித்த சிறிதுநேரத்தில் முதலாவது கோலை மனேகராக் கோஷ்டியினர் சார்பில் எம். சின்னராசா போட்டார். சிலநிமிடங்களின் பின் முல்லைத்தீவின் சார்பில் பொன்னம்பலம் ஒரு கோலைப் போட்டு எண்ணிக்கையைச் சமமாக்கினுர். பின்னர் மனேகராக் கோஷ்டியைச் சேர்ந்த என். சின்னராசா ஒரு கோலைப் போட்டு எண்ணிக்கையை 2—1 ஆக உயர்த்தினுர்.

சிலவினுடிகளின்பின் முல்லைத்தீவுக் கோஷ்டியினர் ஒருகோலைப் போட்டு 2—2 ஆக உயர்த்தினர். இடைவேளையின்போது எண்ணிக்கை 2—2 ஆகவே இருந்தது. இடைவேளையின் பின் ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. சிறிது நேரத்தில் மனேகராக் கோஷ்டியினர் 'பனுல்டி' உதைமூலம் இன்னெரு கோலைப் போட்டனர். போட்டி முடிவடையுமுன் இருநிமிடங்கள் இருக்கையில் முல்லைத்தீவுக் கோஷ்டி ஒரு கோலைப்போட்டு எண்ணிக்கையை 3-3 ஆக்கினர். முல்லைத்தீவு விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு மத்தியஸ்தராக எல். அருளானந்தம் கடமையாற்றினுர்.

### யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றி

சுழிபுரம், புதன்
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் கோஷ்டிக்கும், சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி ஆசிரியர் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் கோஷ்டிவெற்றிபெற்றனர். யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டுமைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரியினர் நாலு கோல்களையும், சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி கோஷ்டியினர் இரண்டு கோல்களையும் போட்டனர் ஆசிரியர் திரு. கே. துரைரைராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

### பாடும் மீனுடன் யாழ்கோஷ்டி மோதும்

யாழ்ப்பாணம், வியா.
1966-ம் வருடம்முற்பகுதியில் மட்டக்களப்பு பாடும் மீன் கோஷ்டிக்கும் யாழ்ப்பாணம் பாஷையூர் சென். அந்தனீஸ் விளையாட்டுக் கோஷ்டிக்குமிடையில் மட்டக்களப்பு நகரசபை விளையாட்டு மைதானந்தில்சிநேகபூர்வமான விளையாட்டுப்போட்டியொன்று நடைபெறவிருக்கிறது. பாடும் மீன் கோஷ்டியின் காரியதரிசி திரு. ஜி. டபிள்யு. பிள்ளையின் அழைப்பின் பேரிலேயே சென். அந்தனிஸ் கோஷ்டியினர் அங்குசெல்லவிருக்கின்றனர்.

யாழ். மாநகரசபை
### டெனிஸ் விளையாட்டு மைதான திறப்பு விழா

யாழ்ப்பாணம், வியாழன்
யாழ்ப்பாணம் மாநகரசபை பொழுதுபோக்குச் சங்கத்தினரால் யாழ். திறந்தவெளியரங்கிற்கு அருகில் புதிதாக அமைக்கப்பட்ட டெனிஸ் விளையாட்டுமைதானத்தை சென்ற திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் மேயர் திரு எஸ். சி. மகாதேவா திறந்துவைத்தார். அவர் விளையாட்டு மைதானத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில், யாழ்ப்பாண மாநகரசபையில் முன்னர் கமிஷனராகக் கடமையாற்றிய திரு. டி. டி. ஜெயசிங்கா, திரு. ராஜேந்திரம் ஆகியோரின் ஒத்துழைப்பு மேற்படி விளையாட்டு மைதானம் சிறந்து அமையப் பெரிதும் உதவியது என்றுர். மைதானத்தை உருவாக்குவதில் ஒத்துழைத்த எல்லோரையும் பாராட்டிய பின் அதன் வளர்ச்சிக்கு மாநகரசபை தன்னுலான உதவியைச் செய்யுமெனக் கூறினுர்.

யாழ். மாநகரசபையில் கமிஷனராகக் கடமையாற்றிய திரு. டி. டி. ஜெயசிங்கா மைதானத்தில் முதலாவது விளையாட்டை ஆரம்பித்துவைத்தார்.

மாநகரசபை கமிஷனர் திரு. சமி, மாநகரசபைக் கணக்காளர் திரு. ஹட்சன் செல்வராஜா ஆகியோரும், மற்றும் பலரும் உரை நிகழ்த்தினர். ந. நி.

### சுழிபுரத்தில் நெசவு நிலையம்

சுழிபுரம், புதன்
சுழிபுரம்பெரியதம்பிரான் கோவிலுக்கு அடுகாமையில் அரசாங்கத்தால் நெசவுநிலையம் ஒன்று நிறுவப்படவிருக்கின்றது. நெசவு நிலையம் நிறுவுவதற்கான நிலத்தை ஆசிரியர் எஸ். நாகராசர் நன்கொடையாக வழங்கியுள்ளார். நெசவுநிலையத்தை நிறுவும் வேலைகளை இப்பகுதி பொதுமக்கள் குழு ஒன்று கவனித்து வருகின்றது.

## வரிவிளம்பரம்

### தேவை

விற்பனைக்கு பெண்கள் தேவை. திறமைக்கேற்ப சம்பளமும், கமிஷனும் கொடுக்கப்படும். நேரில் விண்ணப்பிக்கவும். டாட்டா இன்டஸ்றீஸ், (சென்றல் சேவிஸ் ஸ்டேஷன் பின்), K. K. S. வீதி, சுன்ணுகம். 1406

### வாடகைக்கு

சுண்டிக்குளி, கச்சேரிபள்ளிக்கூடங்களுக் கருகாமையில் வீடும் வளவும் வாடகைக்கு கொடுப்பதற்கு இருக்கிறது. நம்பர் 7, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, சுண்டிக்குளி.
1405

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணுனந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.




### கொழும்பு
வியாழன் 25-11-65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

344 மீற்றர் & 61 மீற்றர்
காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்தஇசை, 7-45 திரை இசை.

344 மீற்றர் & 49 மீற்றர்
பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்
மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 படப் பாட்டுக்கள்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 தமிழோடிசை, 7-00 விமர்சனம், 7-15 முகவீணை. 7-45 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வீணை, 10-00 நிலையஒலிப் பதிவுகள்.

### நெல் உற்பத்தியை பெருக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், புதன்
நெற்செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டும், உப உணவு உற்பத்தியை பெருக்கும் நோக்கத்துடனும் ஏற்றுமதி இறக்குமதி அதிகாரி அரசாங்கத்தின் உத்தேசித்த ஐந்து வருட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட வேண்டிய தண்ணீர் பம்புகள், விவசாயத்திற்குவேண்டிய உபகரணங்கள் முதலியவற்றிற்கான ஒரு பட்டியலை தயாரிக்கும்படி கேட்டுள்ளார்.

### சிரமதானம்

கோண்டாவில், புதன்
கோண்டாவில் உப்புமடம் சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் புனருத்தாரண வேலைகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது. பழைய கட்டடத்தை அகற்றுவதிலும், புதிய கட்டடத்தை உருவாக்குவதிலும் கோண்டாவில் வாசிகளும். மற்றும் தொண்டர்களும் சிரமதான இயக்கமூலம் செயலாற்றி வருகின்றனர்.

# "ஜம்மு — காஷ்மீர் தவிர்த்து பேச்சு நடத்துவோம்"

## அயூப்பை சந்திக்க சாஸ்திரி இணக்கம்

புதுடில்லி, நவ. 23 சோவியத் யூனின் கோரிக்கையின் மீது பாகிஸ்தான் அதிபர் அயூப்கானை ரஷ்யாவில் சந்திக்கத் தாம் தயாராகவிருப்பதாக இந்தியப் பிரதமர் திரு. சாஸ்திரி இன்று ராஜ்ய சபையில் தெரிவித்தார்.

இந்தி—பாகிஸ்தான் சம்பந்தமான பல விஷயங்கள் குறித்தும் விபரமாகப் பேச தயாராகவிருப்பதாகத் தெரிவித்த பிரதமர் சாஸ்திரு, ஜம்மு காஷ்மீர் குறித்தோ அல்லது இந்தியாவின் உள்விவகார உரிமை குறித்தோ பேச்சு நடத்த முடியாது என்று கூறினர்.

சர்வதேச நிலைமை குறித்து ராஜ்ய சபையில் விவாதம் நடைபெற்றது. பிரதமர் சாஸ்திரி இவ்விவாதத்தில் கலந்துகொண்டார்.

சீனு பற்றி அவர் குறிப்பிடுகையில், இந்தியாவுடன் தீர்வுகாணும் நோக்கம் எதுவும் அதற்குக் கிடையாதென்ருர். ——

## பஸ் நிலையத்தின் 'கண்ணராவி!'

யாழ்ப்பாணம் புதன், நேற்று முன்தினம் மாலை பெய்த பெருமழை காரணமாக யாழ்ப்பாணம் பஸ் நிலையம் ஒரே வெள்ளக் காடாகி, நேற்று மாலை வரை, வெள்ளம் வழிந்தோடாது பஸ் நிலையத்தில் தேங்கி நிற்பதால் பிரயாணிகளுக்குப்பெருந்தொல்லை ஏற்பட்டுள்ளது.

பெருமழை பெய்யும் சமயம் பிரயாணிகள் தங்குவதற்கு ஒதுக்கிடம் இல்லாமல், பஸ்நிலையத்தைச்சுற்றியுள்ள, மீன் கடைகளிலும் இறைச்சி, கருவாட்டுக் கடைகளிலும் தஞ்சம் அடையவேண்டிய நிலை ஏற்படுகின்றது.

பஸ்நிலையத்தில் நின்ற பிரயாணிகள் தங்கள் செருப்புக்களைக் களற்றி கையில் வைத்திருந்த காட்சி கண்ணராவியாகவிருந்தது.

## சுன்னுகம் பட்டின சபை

### சுன்னுகம் சந்தையில் வரி அறவிடுபவர்கள் பதவி

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு சுன்னுகம் பட்டின சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிக்கும் 20 வயதிற்கும் 35 வயதிற்குமுட்பட்ட ஆண்களிடமிருந்து மனுக்கள் 29-11-65-திகதி பி. ப. 3-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். 18 ஸ்தானங்களுக்கும் வட்டார ரீதியில் நியமனங்கள் செய்யப்படும். எழுத்துப் பரீட்சையிலும், நேர்முகப் பரீட்சையிலும் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் தேவைக்கு மேற்பட்ட தொகையினர் சித்தியடைந்து இருந்தால் அதிர்ஷ்டலாபச்சீட்டு மூலம் தேரிவுசெய்யப்படும். மனுப்பத்திரங்களும் ஏனைய விதிகளும் பட்டின சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொ. நாகலிங்கம்
தலைவர்
பட்டின சபை சுன்னுகம்.
பட்டின சபை அலுவலகம்,
சுன்னுகம், 23-11-65.

1273

## பொதுஉறவுப் பகுதி

பம்பலப்பிட்டி, செவ். தபால்தந்தித் தொடர்பு பகுதியில் பொதுஉறவுப் பகுதியொன்று இன்று ஆரம்பிக்கப்பட்டது.

இப்பகுதியை ஆரம்பித்து வைத்தபோது வேலை தபால் தந்தித் தொடர்பு மந்திரி திரு. மொண்டேகு ஜெயவிக்கிரமா, தபால், தந்தி தொடர்பு பகுதியுடன் பொதுமக்கள் தொடர்பு கொள்வதற்கு பொதுஉறவுப்பகுதி பெரிதும் உதவும் எனக் குறிப்பிட்டார்.

அரசாங்கம் குறிப்பிட்ட ஒரு திட்டத்துக்கென ஒதுக்கப்பட்ட பணத்தை அதற்கே செலவுசெய்யுமென்றும் அரசாங்கத்துக்கும் பொதுமக்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துவது தேசிய அரசாங்கத்தின் நோக்கமென்றும் மந்திரி மேலும் பேசுகையில் தெரிவித்தார். ——

## முன்னுள் கல்வி மந்திரிக்கு 'வாரண்ட்'

### 5 நிமிடத்தில் ஆஜாஞர்

காலி, செவ். முன்னுள் கல்விமந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்லைக்கு இன்று காலை 'வாரண்ட்' பிறப்பிக்கப்பட்டது. 'வாரண்ட்' பிறப்பிக்கப்பட்ட ஐந்து நிமிடங்களுக்குள் திரு. கலுகல்லை தமது வழக்கறிஞர் திரு. வி. குமாரசுவாமி மூலம் காலி மாஜிஸ்திரேட் முன்னிலையில் சரணடைந்தார்.

இதனைத் தொடர்ந்து வாரண்ட் உத்தரவு ரத்துச் செய்யப்பட்டது.

ஒரு வழக்கொன்றில் திரு. கலுகல்லை புரசிக்கியூஷன் சாட்சியாகும். இவ்வழக்கில், ஜே. வி. டேவிட் என்பவர் அப்போது கல்வி மந்திரியாகவிருந்த கலுகல்லையின் அரசாங்க முத்திரையை (சீல்) உபயோகித்து பலருக்கு வேலை தேடிக் கொடுத்ததாக பொலிசாரிஞல் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார்.

இவ்வழக்கு டிசம்பர் மாதம் 27-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்திய-பாக் யுத்தம்

## மொத்தம் 10,000 பேருக்கு சேதம்

புதுடில்லி, நவ, 23 இந்தோ-பாகிஸ்தான் சண்டையில் இம்மாதம் 15-ம் திகதி வரை 5800 பாகிஸ்தானியர் கொல்லப்பட்டனர்என ராஜய சபாவில் அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டது. இந்திய தரப்பில் 2226 பேர் கொல்லப்பட்டனர்என்றும், 1500 பேர் காணப்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது. காயமடைந்த 7874 இந்தியர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் மீண்டும் ராணுவ சேவையில் சேர்ந்துவிட்டார்கள்.

## 'ஈழநாடு' சூருவளி

யாழ்ப்பாணம், வியா. 'ஈழநாடு' சூருவளி நிவாரண மாத உதவித் திட்டத்துக்கு கொழும்பிலுள்ள திரு. ஷண்முககுமரேசன் இம்மாதப் பணமாக ரூபா 30 அனுப்பி வைத்துள்ளார்.

## கூப்பன்யாருடையது?

யாழ்ப்பாணம், வியா. யாழ்ப்பாணம் வண்ணுன் குளத்தடியில் ஒருபர், பங்கிட்டரிசிப் புத்தகமொன்றைக் கண்டெடுத்து ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர்கள் தகுந்த அத்தாட்சி காட்டி ஈழநாடு காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணம், வியா. யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் பங்கீட்டரிசிப் புத்தகமொன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த அத்தாட்சியுடன் 'ஈழநாடு' காரியாலயத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

## பெரிய புராணப் படிப்பு

சுழிபுரம், புதன் வழக்கம்பரை அம்மன் கோவில் மண்டப முன்றலில் பெரிய புராணப் படிப்பு ஆரம்பமாகி நடைபெறுகின்றன. தினமும் இரண்டு மணிக்கு ஆரம்பமாகி மாலை ஐந்தரை மணிவரையும் நடைபெறும் இப் படிப்பு தொடர்ந்து ஒரு மாத காலத்துக்கு இடம்பெறும்.

## வேலை வாய்ப்புகள்

சௌக்கிய சேவைப் பகுதியில் நிலவும் பொதுச் சௌக்கிய மருத்துவ மாதர் பதவிகளை நிரப்புவதற்கு, பதினெட்டு மாத பயிற்சி பெற்ற மருத்துவ மாதரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணபதாரர் 35 வயதுக்கு மேற்படாதவராயிருக்க வேண்டும்.

ஃ ஃ ஃ

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தில் கட்டடப் பகுதிக்கு தொழில் நுட்ப உதவியாளர்கள் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர் குறிப்பிட்ட தொழில் நுட்ப பரீட்சையில் சித்திபெற்றவராகவும், தொழில் நுட்பத்துறையில் அனுபவம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

கைத்தொழில் தோட்ட கார்ப்பரேஷனில் 'புக்கீப்பர்' பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 'புக்கீப்'பிங்கில் 5 வருட அனுபவம் பெற்றவராகவும் எஸ். எஸ். சி. அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

ஃ ஃ ஃ

இலங்கை டயர் கார்ப்பரேஷனில் டயர் பரிசோதக உதவியாளர்கள் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. டயர் பரிசோத உதவியாளர் பதவிக்கு விண்ணப்பம் செய்பவர்கள் எஸ். எஸ். சி. சித்தி பெற்றவராகவும், அங்கீகரிக்கபட்டகராஜில் 3 வருட அனுபவம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். விண்ணப்பத்தாரர்கள் 20 க்கும் 30 வயதுக்குமிடைப்பட்டவராகவும் இருக்க வேண்டும்.

மேற்படி டயர் கார்ப்பரேஷனில் வேறுசில உயர் பதவிகளுக்கும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஃ ஃ ஃ

சிறை இலாகா, தேசிய நூல் கார்ப்பரேஷன் ஆகியவற்றிலிருந்தும் சில பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேற்படி பதவிகள் குறித்து மேலதிக விபரங்களை 19-11-65 ல் வெளியாகியுள்ள இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பார்க்கலாம்.

## நாட்டிலும் நகரிலும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி) களில் 1735க்கு மேற்பட்டவர்கள் தமிழ்மொழி அறிவை விஸ்தரித்துக் கொள்ள விரும்பவில்லை என்று கூறப்படுகிறது. சமஸ்கிருதம் தமிழருக்கும் சிங்களவருக்கும் பயன் தரக்கூடிய ஒரு பழைய மொழி. சுமார் 53 மாணவர்களே இதை ஒரு பாடமாக எடுத்திருக்கிருர்கள்!

பொதுப்படையாகப் பார்க்கப்போனுல் தமிழ் மாணவர்கள் விஞ்ஞானப் பாடங்களேயே அதிகமாக விரும்பி கற்றிருக்கிருர்கள் என்பது தெரியவருகிறது. யாழ்ப்பாணத்து மாணவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் விஞ்ஞானப் பாடங்களை எடுத்திருக்கிருர்கள் இலங்கை முழுவதிலும் விஞ்ஞானப் பாடங்கள் எடுத்தவர்களின் தொகை 6416. இதில் யாழ்ப்பாண மாணவர்களின் தொகை 1087 சனத்தொகை விகிதாசாரத்தின்படி பார்த்தால் இவர்களே அதிகமாக விஞ்ஞானப் படிப்பை விரும்புகிருர்கள்.

அரசாங்கசேவை ஒன்றே சாசுவதமான கதி மோட்சத்தைத் தரும் கற்பக தரு என்று நம்மவர்கள் எண்ணிய காலம் போய், இனி மேல் அதை நம்பியிருப்பதிலும் பார்க்க, தொழில் முயற்சிகளுக்கு உதவக்கூடிய விஞ்ஞானப் படிப்பே விழுப்பம் தரும் என்று எண்ணும் காலம் வந்திருப்பதை இந்த விபரங்கள் தெரிவிக்கின்றனவல்லவா?

ஃ ஃ ஃ

ஒரு மகாவித்தியாலய பிரின்சிப்பல் தமது மேல் வகுப்பு மாணவர்களிடம் கல்விப் படிப்பு முடிந்தபின் என்ன உத்தியோகம்பார்க்க விரும்புகிறீர்கள் என்று கேட்டுக் கொண்டு வரும் போது ஒரு மாணவன் 'நான் எம். பி. யாக விரும்புகிறேன்' என்று கூறினுனும். அவனுடைய தேசபக்தியை வியந்து கொண்டு மேலும் விசாரித்தபோது எம். பி யாக வந்தால் மாதம் ஆயிரம் ரூபாய் சம்பளமும் பத்து வருடங்களுக்குப்பின் சீவிய பரியந்தம் பென்ஷனும் கிடைக்கும் என்ற ஆசைதான், அவனை அப்படிச் சொல்லத் தோன்றியது என்ற உண்மை வெளியாயிற்று!

முன்னேற்றமான நாடுகள் எல்லாவற்றிலும் தேசபரிபாலனம் செய்யும் தலைவர்கள் நாடு வளம்பெற வேண்டுமென்ற நோக்கத்துடன் தங்களுடைய சம்பளங்களையும் அலவன்சுகளையும் குறைத்துக் கொண்டு சிக்கன வாழ்வு நடத்துவதற்கு பொதுமக்களுக்கு எடுத்துக் காட்டாய் விளங்க எத்தனிக்கும்போது எமது எம். பி.க்கள் சம்பளம் போதாதென்று அதுவும் இலங்கை இன்றுள்ள ஈன நிலையில் கூச்சல் போடுவது எவ்வளவு விசித்திரமாயிருக்கிறது.

— வழிப்போக்கன்

## எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், வியாழன் இளைப்பாறிய அரசாங்க ஊழியர் ஒருவர் மது அருந்திய நிலையில் காணப்பட்டதாக யாழ்ப்பாணம் பொலிசாரிஞல் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. ரி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டபின், நீதிபதி எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

எதிரி சார்பில் புரக்டர் ஏ. அன்ரனி ஆஜராஞர்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி) மத்தியானம் 3 மணிக்கே, அர்த்த சாம பூசையைச் செய்துவிடும்படியும் கிரகண காலத்தில் அப்படிச் செய்வதுண்டென்றும் சமாதானம் சொன்னுர்கள். என்ருலும் கோவில் பூசை விஷயத்தில் இப்படிச் செய்யப்படாதென்று கிளர்ச்சி நடப்பதாகத் தெரிகிறது. ஓட்டல்கள் எல்லாம் திங்களன்று பகலுக்குமேல் கிடையாதாம்.

மகாத்மாகாந்தி ஆத்மீக காரணத்துக்காக சோமவார விரதமிருந்தார். அன்று பேசுவதுமில்லை; சாப்பிடுவதுமில்லை. அதனுல் உடலுக்கும் உள்ளத்துக்கும் எவ்வளவோ நன்மை என்தம் அனுபவங்களை எழுதியுள்ளார். விரதமிருப்பறை இக்காலத்தில் பலரும் மறந்து விட்டோம். பாகிஸ்தான் சண்டையால், இந்த மறைமுகமான ஒரு நன்மையும் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளது போலும்!

ஃ ஃ ஃ

'மெய்யன்பரானுர்க் கருளுங் கண்டேன், வேடுவனுய் நின்ற நிலையுங் கண்டேன், சையம் பரணெரித்த காட்சி கண்டேன், கங்கணமும் அங்கைக்கனலுங்கண்டேன், ஐயம்பல வூர்திரியக் கண்டேன், அன்றவன்றன் வேள்வி யழித்துகந்து, வையம் பரவ இருத்தல் கண்டேன், வாய்மூரடிகளை நான் கண்டவாறே.

—அப்பர் சுவாமிகள்

## தரம்குறைந்த....

(1-ம் பக்கத் தொடர்ச்சி) தயாரிப்பாளருக்கு நல்ல மாவு விநியோகிக்கப்படுகிறது. ஆனுல் பொதுமக்கள் கடைகளில் வாங்கும் மாவு இன்னமும் பெரும்பாலும் தரம் குறைந்த 'கொண்டினென்டல்' மாவுதான்.

## கோவா வாக்கெடுப்பு இல்லை

புதுடில்லி, நவ 24 கோவாவை இணைக்கும் விஷயம் சம்பந்தமான வாக்கெடுப்பு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாயும், தற்போதைய அவசர காலநிலையே இதற்குக் காரணம் என்றும் பிரதமர் ஊர்ஜிதம் செய்தார்.

## 50 ஆபிரிக்கர் கைது

ஸாலிஸ்பரி, நவ. 24 ரொடீஷியா வேலைநிறுத்தம், ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து 50 ஆபிரிக்கர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

## யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரி பிரிவு

### பிரவேசம்---1966

1966 லும் 1967 லும் நடக்கும் சோதனைகளுக்குத் தயார்செய்யும் பொதுத் தராதரப் பத்திர உயர் நிலைப் பரீட்சை வகுப்புகளில் (கலைத்துறையும், விஞ்ஞானத்துறையும்) தை 1966-ல் மாணவர் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

விண்ணப்பப் பத்திரமும் தகவல் தொகுப்பு அறிக்கையும் அலுவலகத்திலிருந்து 29-11-65 க்கு முன்பெற்றுக் கொள்ளவேண்டும். விண்ணப்பிப்போர் தங்கள் விலாசமிட்ட, முத்திரையொட்டிய கடித உறை அனுப்புதல் வேண்டும்.

பதிவாளர்.
வட்டுக்கோட்டை.

1260

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி; 23-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 25ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.